# ஜனதா-3

| | | |
|---|---|---|
| இடைக்காலப் பிரச்னைகள் | — | அச்சுத் பட்வர்த்தன் |
| மாணவர்களுக்கு | — | ஜெயபிரகாஷ் |
| தமிழர்களுக்கு | — | அருணு |

★

'தினசரி' வெளியீடு
விற்பனை உரிமை:
ஜே ஹிந்த்
புத்தகம் வெளியிடுவோர்
சென்னை-17.

# Aruna's Message

Janata booklets in Tamil
will carry the message
of 'HL' and the Socialist
programme for its message
to the people of Tamil
Nad. From what I have
seen of the people my
faith in them and their
cause has heightened. I
... that I shall

2

humans loyal to their
aspirations
Hindustani
be your second language.
There must be no barrier
between us of the North
and you of the South.
Through common suffering
in slavery we have
become one. In our common
efforts to end Socialist
economic slavery we must

3

forge new bonds. Language
written and spoken is a
... means of cementing
people.
Wishing you well
in your new venture,
ever yours to command
Aruna Asaf Ali

# 'ஜனதா' விற்கு புரட்சித்தலைவி
## அருணாவின் ஆசி



'42-ம் ஆண்டின் புரட்சிச் செய்தியையும் '46-ம் வருஷமும் அதற்குப் பிறகும் அப்போதைக்கப்போது வகுக்கப்படும் சோஷலிஸ்டுத் திட்டத்தையும் தமிழர்களுக்கு 'ஜனதா' தமிழ் புத்தகங்கள் அளிக்கும்.

மக்களை நேரில் சந்தித்த பிறகு அவர்களிடத்தில் எனக்கு அதிக நம்பிக்கையும், அவர்களின் லக்ஷியத்தில் தீவிரப் பற்றுதலும் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்களின் அபிலாஷைகளுக்கு என்றைக்கும் முரணாக நடக்காமலிருக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

ஹிந்துஸ்தானி உங்களது இரண்டாவது பாஷையாக இருக்கவேண்டும். வடநாட்டில் இருக்கும் எங்களுக்கும், தென்னாட்டில் வசிக்கும் உங்களுக்குமிடையே எவ்விதமான அரணுமிருக்கக்கூடாது. நாம் இருவரும் அடிமைகளாக வாழ்ந்து கஷ்ட நஷ்டங்களை ஒன்றாக அனுபவித்து சகித்து வந்திருக்கிறோம். பொருளாதார, சமூக அடிமைத் தனத்தை அழிக்கவேண்டிய பொதுவான முயற்சியில் நாம் புதிய 'பந்தங்களை' ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

மக்களை ஒன்றுபடுத்துவதற்கு எழுதி பேசுகிற பாஷை பெரியதொரு சாதனமாகும்.

உங்களது புதிய முயற்சி ஜெயம் பெற வேண்டுகிறேன்.

உங்களது உத்திரவுக்கு எப்பொழுதும் தயாராகவிருக்கிறேன்.

—அருணா ஆசப் அலி

முதல் பதிப்பு அக்டோபர். '46.

பதிப்பாசிரியர் குழு :
எஸ். ஆர். சுப்ரமண்யம்
எஸ். ஏ. ரஹீம்
வி. ஆர். ராதாகிருஷ்ணன்

விலை அணா நான்கு
இலங்கையில் 30 சதம்

ஜோதி ஹிந்த்
புத்தகம் வெளியிடுவோர்
சென்னை- 17

# புரட்சிப் பாதையை காங்கிரஸ் புறக்கணிக்க முடியாது.

## தமிழ் நாட்டினருக்கு ஸ்ரீமதி அருணுவின் செய்தி.

மூன்று வார காலமாக தமிழ், கேரள மக்களிடையே சுற்றுப் பிரயாணம் செய்து வந்தேன். அங்கெல்லாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அழிக்கப் புரட்சி செய்ய வேண்டும் என்று மக்கள் இப்பொழுதும் கூக்குரலிடுகின்றனர். பிரிட்டிஷ் ஆட்சி இன்னமும் இந்நாட்டில் இருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர். நகரத்தில் பத்திரிகைப் படிப்பவர்கள் தான் பிரிட்டிஷ் அதிகாரம் இந்நாட்டில் அஸ்தமித்து விட்டதாக நினைக்கின்றனர். புது டில்லியில் நிகழ்ந்திருக்கும் மாறுதலைப் பற்றி கிராமவாசி அறிந்து கொள்ளவில்லை. பழைய அமைப்பில் எவ்வித மான மாறுதலும் இல்லாததினுல் சாதாரண கிராமவாசியால் டில்லி மாறுதலைப் புரிந்து கொள்ள முடியவில்லை. புரட்சிகரமான போராட்டத்தின் பயனுக பிரிட்டிஷ் ஆதிக்கம் அழிந்திருந்தால் பாமரன் பரம சந்தோஷமடைந்திருப்பான். கலப்பற்ற பரிபூர்ண சுதந்திரம் அடைந்தால்தான் 'மற்றவர்களால் மறக்கப்பட்ட பாமரன்' ஆனந்தமடைவான். அறைகுறை சுயராஜ்யம் அவனுக்குத் திருப்தி அளிக்காது. 'உனக்கு இனிமேல் க்ஷேமம் தான்' என்று வரப்போகும் காலத்தைப் பற்றி கூறி பாமரனை திருப்தி செய்யமுடியாது. இன்றைக்கு அவனுக்குள்ள கஷ்டத்தையும் தேவையையும் போக்குவதையே அவன் விரும்புகிறுன். அவனுடைய 'பரிபூர்ண சுதந்திரத்தின்' கருத்து அதுதான்.

### சென்னை சர்க்கார்

இம் மாகாணத்தில் வசிக்கும் பெரும்பாலோர் சென்னை சர்க்கார் தங்களுடைய பிரதிநிதிகளின் சர்க்கார்

என்று கருதவில்லை, அவர்களுடைய உடனடியான தேவைகளை சர்க்காரின் 'பாதசாரி கொள்கை' பூர்த்தி செய்வதாக் காணோம். அட்வைஸர் ஆட்சி காலத்திலிருந்த எதேச்சாதிகார ஆபீஸர்களே இன்னமும் நிர்வாகத்தின் தலைமையிலிருப்பதால் பொதுஜன சர்க்காரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்வது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. 1942-ம் ஆண்டில் பயங்கர ஆட்சி நடத்திய அதிகாரிகள் இதுவரையில் சர்க்கார் வேலையிலிருந்து எடுக்காமலிருப்பதைக் கண்டு எங்கும் மக்கள் மனக்கசப்புற்றிருக்கின்றனர். தேர்தல் காலத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளை நடைமுறையில் கொண்டுவராததைக் கண்டு தாலுக்கா, ஜில்லா காங்கிரஸ் ஊழியர்கள் எல்லோரும் வருத்தமடைந்திருக்கின்றனர்.

காங்கிரஸுக்கு தொந்தரவு கொடுக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு கம்யூனிஸ்டுகள் செய்யும் காரியங்களைக் கண்டு காங்கிரஸ் வாதிகள் மிகவும் கவலையுறுகின்றனர். ஆனால் கம்யூனிஸ்டுகளை அடக்குவதற்காக சர்க்கார் கையாளும் கொள்கை 'கம்யூனிஸ்டுகளை பலமடைய உதவுமோ, என்றும் அவர்கள் ஐயமுறுகின்றனர். கம்யூனிஸ்டுகளுக்கு மக்களிடத்தில் செல்வாக்கு கொஞ்சமும் கிடையாது என்பது எல்லோரும் நன்கு அறிந்ததே.

காங்கிரஸ் சர்க்கார் நிர்மாண வழியிலே தங்களுடைய பொருளாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் தைரியமாய் வெளியிடவேண்டும். அத் திட்டங்களை 'பழைய சர்க்காரின் சிப்பந்திகளின் மூலமாக' நிறைவேற்றுவதைவிட காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மூலமே நிறைவேற்ற முயற்சிக்கவேண்டும். சிறிய சிறிய பதவிகளுக்காக போட்டிப் போடும் அதிகார அரசியலை காங்கிரஸ் வாதிகள் விடாவிட்டால் காங்கிரஸ் விரோதிகள் காங்கிரஸை பலஹீனப் படுத்தி பலமற்ற ஸ்தாபனமாகச் செய்து

விடுவார்கள். தேர்தலில் மாத்திரம் போட்டியிட்டு வேலை செய்யும் ஸ்தாபனமாக காங்கிரஸ் மாறக்கூடாது.

## நம்முடைய வேலை

இன்று அதிகாரத்திலிருப்பவர்களுக்கு 'ஒத்து ஊதும்' கட்சியாகவும் காங்கிரஸ் ஆகக்கூடாது. இப்பொழுது 'ஏகாதிபத்திய எதிர்ப்பு வேலை உண்மையிலேயே' முடிந்திருந்தால், பொதுமக்களின் பொருளாதார சமூக ஜனநாயக ஆட்சிக்கான போராட்ட ஸ்தாபனமாக காங்கிரஸ் விளங்க வேண்டும்.

இம்மாதிரி செய்வதற்கு 'புதிய சக்திகளை' நாம் திரட்டவேண்டும். தொழிலாளியையும் விவசாயியையும் ஸ்தாபனரீதியாக ஒன்று திரட்டுவதே நமது முக்கிய வேலையாக இருக்கவேண்டும். இதை சாதிப்பதற்கு நமக்குப் பயிற்சி பெற்ற ஊழியர்கள் ஏராளமாக வேண்டும். ஒருவருக் கொருவர் குற்றம் குறைகள் சொல்லிக் கொண்டு 'பதவி வேட்டையாடுவதினுல் ஏற்படும் வீண் நஷ்டத்தை' கொஞ்சமும் நாம் பொறுக்கமுடியாது. பழைய காங்கிரஸ் வாதிகளின் இடத்தை பூர்த்திசெய்ய புதிய காங்கிரஸ்காரர்கள் முன்வரவேண்டும். காங்கிரஸை புனர் நிர்மாணம்செய்து அதற்குப் புதிய சக்தியை ஊட்டி, பொதுஜனங்களின் புதிய தேவைகளைத் திருப்தி செய்ய இப் புதிய காங்கிரஸ்வாதிகள் முயலவேண்டும்.

தமிழ்நாட்டு இளைஞர்களும் கேரள வாலிபர்களும் இவ்வுண்மையை நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றனர். உணர்ச்சியும் உற்சாகமுமுள்ள இளைஞர்களாக அவர்கள் இருக்கின்றனர். அரசியல் நோக்கத்தில் மாறுதலையும், வேலைத்திட்டத்தில் புதிய முறையையும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். காங்கிரஸ் அவர்களின் உற்சாகத்தைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் வேறு ஏதாவது ஸ்தாபனம் அவர்களின் கவனத்தைக் கவரும். இப்பொழு

திருக்கும் கட்சிகளுக்குள் கம்யூனிஸ்டு கட்சிதான் அடுத்த படியாக இருக்கிறது.

தேசியத்திற்கு விரோதமான இக் கம்யூனிஸ்டு கட்சி வாலிபர்களை வசீகரிக்காமலிருக்க வேண்டுமானால் காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் தங்கள் கட்சியைப் புனர் நிர்மாணம் செய்து 'தீவிர சோஷலிஸ்டுகளை' ஒன்று சேர்க்க வேண்டும்.

எண்ணங்களினால் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தைப் போக்கி, எவ்விதமான வேலையும் செய்யாத தேக்கத்தை நீக்கி காங்கிரஸ் ஸ்தாபனத்தை புனர் நிர்மாணம் செய்து, மக்களுக்குத் தெளிவான வழியைக் காட்டி தலைமை தாங்கி நடத்த காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் முன்வர வேண்டும்.

★

# இடைக்காலப் பிரச்னைகள்

அச்சுத் பட்டவர்த்தன்

[மத்திய சர்க்காரில் காங்கிரஸ் தலைவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் காரணமாக விளையும் சில முக்கிய பிரச்னைகளைப் பற்றி சோஷலிஸ்டுக் கட்சி பொதுக் காரியதரிசி அச்சுத் பட்டவர்த்தன் இக் கட்டுரையில் மிகவும் அழகாக தர்க்கரீதியில் எழுதியிருக்கிருர்.]

பிரிட்டிஷ் ஆதிக்கம் பரிபூர்ணமாக அழியாவிட்டாலும் கூட, ஜவஹர்லால் நேருவின் தலைமையில் இடைக்கால சர்க்கார் ஏற்பட்டிருப்பது 'அரசியல் சகாப்தத்தில்' ஓர் அத்தியாயத்தின் முடிவு என்று சொல்லலாம். சென்ற ஒரு வருஷகாலமாக 'நீண்ட விவாதங்கள் தான்' அரசியல் வாழ்க்கையில் முக்கிய கட்டமாக விளங்கியது. அதன் பயனாக இப்பொழுது நிச்சயமான ஓர் முடிவு ஏற்பட்டிருக்கிறது. இதற்காக நாம் கொடுத்துள்ள விலை அதிகமா, இல்லையா என்பதைப் பற்றி இப்பொழுதே சொல்வது சாத்தியமில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டின் நேரடியான ஆட்சி கடைசியில் முடிவடைந்து விட்டது என்று சற்று தைரியமாகச் சொல்லலாம். வருங்கால நிர்வாகத்தின் தன்மை எவ்வித மிருப்பினும், ராணுவம், போலீஸ் இவைகளின் நேரடியான தாக்குதல் இனி விளையும் என்று கூறமுடியாது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சாதனங்களை எல்லாம் கொண்டும், நமது சமூக வாழ்க்கையிலிருந்து அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கும் நண்பர்களின் உதவியைக் கொண்டும், இந்திய சுதந்திரத்தை தடுக்க வேண்டுமென்று முஸ்தீப்புகள் செய்து கொண்டிருப்பவர்கள் இப் புதிய மாறுதலினுல் பயந்து பின் வாங்கப் போவதில்லை. நேருக்கு நேர் நின்று இந்திய தேசியத்தை எதிர்ப்பதைவிட பக்கத்தி

லிருந்து தாக்குவது தற்சமயம் பலனளிக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர். நம்மை பிரிப்பதன் மூலமாகவும் புதிய நண்பர்களின் உறவின் மூலமாக அவர்களுடைய நலன்களைப் பாதுகாத்தும் எல்லா தேசங்களிலும் தங்களுடைய ஆதிக்கத்தை செலுத்தலாம் என்று அவர்கள் நினைக்கின்றனர். நேரடியான அரசாங்கம் சென்ற பிறகும் கூட இம்மாதிரியான 'மறைமுகமான ஆதிக்கம்' பல ஆண்டுகள் நடக்கலாம். அதனால் அவர்கள் லாபமும் பெறலாம்.

## தன்னலக்காரர்கள்

அரசியல் நிர்ணய சபையில் நடைமுறையில் சர்ச்சைகள் ஏற்படும் சமயத்தில் 'மறைமுக ஆதிக்கத்தின்' விஷமங்களை நன்கு அறிந்து கொள்வது சுலபமாக இருக்கும். பிரிட்டிஷ் கொள்கையினால் அரசியலில் 'திறமைசாலிகளாக' விளங்குகிறவர்கள் மைனாரிட்டி நலன்களைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டு, மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை பலஹீனப் படுத்த முயற்சிப்பார்கள். சமூக மாறுதலுக்காக ஏற்படும் சக்திமிகுந்த சண்டமாருதத்தை மற்ற வழிகளிலே மாற்ற இந்திய சமஸ்தானாதிபதிகள் முயற்சித்து, இன்னும் சில ஆண்டுகளுக்கு சமூகத்தில் சலுகைகளுடன் வாழ சிலருக்கு பாதுகாப்பு அளிக்கலாம்.

நமது பொருளாதார வாழ்க்கையில் தங்களுக்குள்ள பிடிப்பைத் தளரவிடாமல் கெட்டியாக வைத்துக் கொள்ளவும், மேலும் சற்று விஸ்தரிக்கவும் ஆசைப்படும் பெரிய இந்திய வியாபாரிகள், பிரிட்டிஷ் அமெரிக்க ஏகபோக உரிமையுள்ள வியாபாரிகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள முயற்சிக்கின்றனர். பல ஆண்டுகளாக இந்திய அரசாங்கத்தை நடத்துவதில் தேர்ச்சிப் பெற்றவர்கள் இம்மாதிரியான முயற்சிகளுக்கெல்லாம் நிச்சயமாக உதவி அளிப்பார்கள். இக் கூட்டுறவுகள்

வாழ்வதற்கான போராட்டத்தை இயற்கையாகவே தூண்டும்.

பக்கவாட்டிலிருந்து நம்மைத் தாக்க அவர்கள் போட்டுள்ள திட்டத்தைக் காங்கிரஸ் தனது சக்திகளை புனர் நிர்மாணம் செய்து எவ்விதம் சமாளிக்கப் போகிறது? 1886-ல் காங்கிரஸ் மகாசபை புதிதாக துவக்கப்பட்ட சமயத்தில் லார்ட் டப்ரின் (அப்போதைய வைஸ்ராய்) 'ராஜ விஸ்வாஸத்துடன் எதிர்க்கும் கட்சியாக காங்கிரஸ் விளங்கவேண்டும்' என்று ஆசிர்வதித்தார்.

அந்நிய அரசாங்கத்திற்கு அடிபணியாது, பிரிட்டிஷ் அதிகாரத்தை எதிர்க்கும் சம்பிரதாயத்தைக் கைக்கொண்டு 'எதிர்ப்பு சக்தி முறையை' சென்ற 60 ஆண்டுகளாக காங்கிரஸ் மகாசபை நன்கு அனுஷ்டித்து வருகிறது. பாதி சுதந்திரமும் பாதி அடிமைத்தனமுள்ள அரசாங்கத்தைத் தலைமை தாங்கி நடத்த காங்கிரஸ் இன்று முன்வந்திருக்கிறது. இப் பெரிய பொறுப்புடன் கூட அரசியல் நிர்ணய சபையின்மூலம் இந்திய மக்களின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்த பூர்ண சந்தர்ப்பமளித்து' புதியதொரு அரசாங்கத்தைப் நிறுவும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது. பழைய அரசியல் அமைப்பின் பந்தாவில் வந்தவர்களே இன்னமும் அதிகாரம் உடையவர்களாக இருப்பதால் இவ் வேலைகளைச் செய்வது மிகவும் கடினமாக இருக்கும்.

### பொதுஜன ஆதரவு

நியாயமான சமூக அமைப்பிற்காக அன்றாடம் நடத்த வேண்டிய போராட்டத்திற்கான 'புதிய ஆயுதங்களை' இந்தியன் தயாரிப்பதற்கு காங்கிரஸ் எவ்வாறு தன்னுடைய 'புதிய அதிகாரத்தை' உபயோகிக்கப் போகிறது? எதேச்சாதிகார நிர்வாக அமைப்பு 'தன்னிஷ்டமான வழியிலேயே' இவ்வளவு ஆண்டுகளாக வளர்ந்து

வந்திருக்கிறது. சட்டபூர்வமாக்கப் பட்டுள்ள அநீதிகளை எதிர்க்க அரசாங்கத்தின் அதிகாரத்தையே உபயோகிக்க வேண்டுமென்று ஆசைப்படும் மக்களின் மனோ நிலையை விரும்பாதவர்களாக அவர்கள் (நிர்வாகத்திலிருப்பவர்கள்) இருக்கின்றனர். ஆகவே சமூக சீர்திருத்தங்களுக்கு அரசாங்கம் காங்கிரஸ் * ஸ்தாபனத்தையே உபயோகிக்க வேண்டும்.

தனது முக்கியமான வேலை முடிந்துவிட்டது. இனி 'எதிர்ப்புத் தன்மையை' விட்டுவிடலாம் என்று காங்கிரஸ் கூறமுடியுமா? நாம் செய்யப்போகும் காரியங்களுக்குள்ளே 'பரஸ்பர சச்சரவுகள்' விளையாதா?

தற்சமயம் இருக்கும் நிலைமையை மாற்றுவதற்காக செய்யப்படும் ஒவ்வொரு திட்டத்தையும், தங்கள் சலுகைகள் குறைக்கப் படுகிறவர்கள் கட்டாயம் கடுமையாக எதிர்ப்பார்கள். ஆகவே நம்முடைய திட்டத்திற்கும் நாம் செய்யவேண்டிய சட்டத்திற்கும் பொதுமக்களின் பூர்ண ஆதரவும் அனுதாபமும் வேண்டுப்.

பாதி அடிமைத் தனமுள்ள அரசாங்க அமைப்பினால் நமது மக்களின் பிரதம நலன்கள் பாதிக்கபடலாம். சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட அநீதியையோ, சட்ட உபயோகத்தில் நேர்ந்த அநீதியையோ, எதிர்த்து மக்கள் உடனே கிளர்ச்சிகள் செய்யலாம்.

பல ஆண்டுகளாக அநீதிகளைப் பொறுமையாக சகித்திருந்த போதிலும், இனி ஒரு க்ஷணமும் மக்கள் பொறுத்திருக்க மாட்டார்கள். மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்பும் அதிருப்தியும் உடனே அநியாயத்தை நிவர்த்திக்க 'கிளர்ச்சி' செய்யத்தான் தூண்டும். பொது ஜனங்களின் அபிலாஷைகளை உண்மையாகப் பிரதிபலிக்கும் ஸ்தாபனமாக காங்கிரஸ் விளங்க வேண்டுமானால் மக்களின் இவ்வியக்கங்களை தலைமை தாங்கி நடத்த

காங்கிரஸே முன்வரவேண்டும். அன்னிய எதேச்சாதிகாரம் ஒரு வர்க்கத்திற்கும் மற்றொரு வர்க்கத்திற்கும் உள்ள உறவுகளை பாதிக்காமல் இதுவரை பாதுகாத்து வந்திருக்கிறது. எங்கெல்லாம் 'உறவுகள்' மாறவேண்டிய சமயம் ஏற்பட்டுவிட்டதோ அங்கெல்லாம் மாற்ற காங்கிரஸ் முயல வேண்டும்.

இப்பொழுதிருக்கும் நிலைமையே இனியும் நீடிக்க அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ்காரர்கள் விரும்புகின்றனரா அல்லது தங்களுக்கிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து மாறுதலை சீக்கிரம் உண்டாக்கப் போகிறார்களா? துரிதமான மாறுதலை ஏற்படுத்துவதே காங்கிரஸ் மகாசபையின் சம்பிரதாயம். இதற்கு நேர்விரோதமான சம்பிரதாயத்தை உடையதே எதேச்சாதிகாரம். அரசாங்கத்திற்கு வெளியேயுள்ள ஸ்தாபனத்தில் வித்தியாசம் தெளிவாக இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம்.

இப்பொழுதிருப்பதுபோல அரசாங்கத்தின் கொள்கைகளை ஆதரித்து, பக்கமேளம் கொட்டும் ஸ்தாபனமாக காங்கிரஸ் இருக்கலாம். அல்லது சர்க்கார் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் ஓர் அடி முன்னின்று உடனடியான முக்கிய மாறுதல்களுக்குப் பொதுஜன ஆதரவை காங்கிரஸ் உண்டாக்கலாம். சமூக சீர்திருத்தப் புயலின் மத்தியில் அரசாங்கம் என்ற கப்பலை ஓட்டுகிறவர்களுக்கு காங்கிரஸ் திசை காட்டும் கருவியாக இருந்து வழிகாட்டலாம். பல ஆண்டுகளாக ஏற்படவேண்டிய மாறுதல் ஏற்படாமல் தேங்கியிருந்தது. இப்பொழுது உடனே மாறுதல் நிகழவேண்டும் என்ற 'புதிய அவசரம்' மக்கள் மனதில் தோன்றியிருக்கிறது. இந்த முக்கிய சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் ஸ்தாபனம் முன்னிருந்து சர்க்காரிலிருக்கும் காங்கிரஸ் வாதிகளுக்கு வழிகாட்ட வேண்டும்.

கடந்த 60 வருஷங்களாக ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தியாக காங்கிரஸ் மகாசபை வளர்ந்து பலம் பெற்றிருக்கிறது. ஆனால் நமது 'உண்மையான லக்ஷியத்தை' பிரதிபலிக்கக்கூடிய நிலையில் இன்றைய 'சர்க்கார்' இருப்பதாக நாம் சொல்ல முடியாது. ஆகவே 'சர்க்காரின் கொள்கையை' கொஞ்சமும் விமர்சனம் செய்யாது அப்படியே ஆதரிக்கும் கட்சியாக காங்கிரஸ் ஆகிவிட்டால், நமது அரசியல் வாழ்க்கையில் ஏற்படும் காலியான ஸ்தானம் உடனே பூர்த்தி செய்யப்படும். யார் அந்த ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வார் என்பது சந்தர்ப்பத்தைப் பொறுத்திருக்கிறது. அவ்விதம் அவ்விடத்தைப் பூர்த்தி செய்கிறவர்கள் காங்கிரஸிற்கு விரோதமாகவும் காங்கிரஸிற்கு மக்களிடத்துள்ள செல்வாக்கை குறைத்து ஜனங்களிடத்தில் தாங்கள் செல்வாக்குப்பெற ப்ரயத்தனம் செய்வார்கள். நமது பெரும் தலைவர்கள் சர்க்காரில் 'நிர்வாகப் பொறுப்பை' ஏற்றுக் கொண்ட பிறகு, காங்கிரஸ் ஸ்தாபன அமைப்பு எவ்விதம் இருக்கிறதோ, அதைப் பொறுத்துதான் இந்தியாவின் 'அரசியல் மார்க்கமும்' இருக்கும். நமது பொருளாதார வாழ்க்கையில் நகரில் தொழிற்சாலைகளை பிரிட்டிஷ் அதிகாரிகள் துவக்கி இருப்பதால், கிராமத்திலிருந்த சாமர்த்தியசாலிகளும், கெட்டிக்காரர்களும் பலர் நகரத்திற்குச் சென்று விட்டனர். ஆகவே நமது கிராமங்கள் மிகவும் பிற்போக்கடைந்திருக்கின்றன. அங்குள்ளவர்கள் 'செய்வதற்கெல்லாம் சரி' என்று சொல்லும் சுபாவம் உள்ளவர்களாகவும், புதிய வழியிலே செல்ல கொஞ்சமும் துணிச்சல் அற்றவர்களாகவும் இருக்கின்றனர். அதே ஆபத்து காங்கிரஸிற்கு தற்சமயம் நேரலாம் .அடியிலிருந்து தலைமைவரை ஒரே 'அதிகாரப் பித்து' தாண்டவமாடுகிறது. அரசாங்க நிர்வாகத்தில் பதவி வகிப்பவர்களுக்கு "ஆமாம்" சொல்லும் ஆசா

113417

மிகள் வசம் 'காங்கிரஸ்' சென்றுவிடும். அல்லது தங்களது சுயநலனுக்காக சர்க்காரின் கொள்கைகள் வகுக்க வேண்டுமென்று ஆசைப் படுகிறவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கைப்பற்றலாம். இவ்விதமான நிலைமையைத் தடுத்து சமாளிக்கக் கூடிய அளவிற்கு நமது மக்கள் இன்னும் விழிப்படையவில்லை. காங்கிரஸ் ஸ்தாபனம் 'கட்சித் தலைவர்கள்' அல்லது 'அதிகார வேட்டையாடும் அரசியல் கோஷ்டிகள்' இவர்களின் கைப் பாவையாக மாறுமானால், சாதாரண இந்தியன் ஸ்தாபனத்தை விட்டு விலகி விடுவான்.

சில வருஷங்கள் அம்மாதிரி நிலைமை நீடிக்குமானால் அமெரிக்காவிலுள்ள 'ஜனநாயக கட்சி மாதிரியாக' ஓர் சாதாரண கட்சியாக 'காங்கிரஸ் மகாசபை' மாறிவிடும்.

இந்தியாவில் சமூகக் குழப்பங்கள் பரந்து பரவியிருக்கும் நிலையில், இவ்விதமான வளர்ச்சி காங்கிரஸில் சச்சரவுகளைக் கட்டாயம் தூண்டும். காங்கிரஸின் ஆத்மீகமும் கவுரவமும், ஐக்கியமும் அதனால் பாதிக்கப்படும்.

இந்த அபாயத்தை உணர்ந்த காங்கிரஸ்காரர்கள் நகரத்திலும், கிராமத்திலும் வசிக்கும் பொது ஜனங்களிடத்தில் சேவை செய்ய முன் வரவேண்டும். பொது ஜனங்களுக்கு நமது தலைவர்களிடத்திலுள்ள பக்தியைப் பயன் படுத்திக் கொண்டு இளம் காங்கிரஸ்வாதிகள் எவ்விதமான பலனையும் அடைய முடியாது.

சமூக மாறுதலுக்கு அரசியல் அதிகாரம் முக்கியமான கருவியாக விளங்க வேண்டுமானால் நன்கு அமைக்கப் பட்டதும் ஒரே மாதிரியான லக்ஷியத்தை உடையதுமான தொழிற் சங்கங்களும், பல விவசாயிகளின் பிரத்தியேக கோரிக்கைகளுக்காக நிறுவப்பட்ட 'கிஸான் சபைகளும்' அவசியமாக இருக்க வேண்டும். அம்மாதிரியான ஸ்தாபனங்கள் தினசரி நடவடிக்கை

களில் சீர்திருத்த சங்கங்களாக இருக்கலாம். ஏழை மக்களின் கோரிக்கைகளும் தேவைகளும் தினம் தினம் அதிகரித்துக் கொண்டே இருப்பதை சமாளிப்பதற்கு 'சோஷலிஸ சமுதாய அமைப்பு' அத்தியாவசியம் என்பதைத் தொழிற் சங்கங்களும் கிஸான் சபைகளும் நாளடைவில் அறிந்துகொள்வது சாத்தியமாகும்.

இவ்விதமான 'ஸ்தாபனங்கள் தேவை' என்பதை நாம் உணர்ந்து கொள்ளும்படியான காலம் மேன்மேலும் வந்துகொண்டே இருக்கும்.

இடைக்காலப் பிரச்னைகளை காங்கிரஸ் தீர்த்துவைக்க வேண்டும் என்று ஆவலுள்ளவர்கள் அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ் தலைவர்களைக் கண்டிப்பதை விட்டு விட்டு அவர்களுடைய அபிப்பிராயத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கான அடிப்படையை நிர்மாணிப்பதில் ஈடுபடவேண்டும். அவர்கள் நிர்மாணிக்க விரும்பும் அடிப்படை சாதாரணமாக காங்கிரஸ் செய்யும் வேலையைவிட தெளிவாக இருக்கவேண்டும். மகத்தான மாறுதல் ஏற்படவேண்டும் என்பதில் திடமான நம்பிக்கை உள்ளவர்கள் அதிகாரத்திலிருப்பவர்களின் நல்லெண்ணத்தில் அதிக ஆசை வைத்துக் கொண்டிருப்பது தகாது.

இருக்கும் நிலைமையிலேயே இதுவரை திருப்தி அடைந்தவர்கள், இனி இந்நிலையில் வாழ மறுப்பார்கள். ஆகவே, நல்லதொரு சமுதாய அமைப்பை நிறுவ, விறுவிறுப்பாக வேலை செய்தால்தான் சாத்தியமாகும்.

நமது பொருளாதார வாழ்க்கையில் மறைமுகமாக ஆதிக்கம் செலுத்தும் அதிகாரமிகுந்த முதலாளிவர்க்க கோஷ்டிகள் சோஷலிஸம் வரும்வரை இருந்துகொண்டு தானிருக்கும். 'கிஸான் மஸ்தூர் பிரஜா ராஜ்' என்ற அழகான வார்த்தைகளில் நமக்குள்ள நம்பிக்கையை அடிக்கடிச் சொல்வதினால் 'சோஷலிஸ சமுதாயம்' உதயமாகி

விடாது. இப்பொழுது காங்கிரஸ் சர்க்கார் கையாளும் 'படிப் படியான' முறைகளிலே திருப்தி அடையாத வர்கள் அவர்களுடைய ஊக்கம், உற்சாகம், சக்தி, எல்லா வற்றையும் சர்க்காரின் தயவை எதிர்பார்க்காத பலம் மிகுந்த தொழிற்ச் சங்கங்களை நிறுவுவதில் உபயோகித் தால், சீக்கிரமாகவும் சுலபமாகவும் பெரும் மாறுதல்களை சமுகத்தில் விளைவிக்க முடியும். அம்மாதிரியான அடிப் படையைக் காங்கிரஸ் மகாசபை ஏற்படுத்துமா? புதிய காங்கிரஸ் ஊழியர்கள் இவ் வேலைக்கு முன் வருவார்களா? இந் நாட்டின் வருங்கால நிகழ்ச்சிகள் இக் கேள்வி களுக்குக் கிடைக்கும் பதிலை ஒத்துத்தானிருக்கிறது.

★

# மாணவர் இயக்கம்

## ஜெயபிரகாஷ் நாராயண்

["மாணவர்களே, வகுப்பு வாதத்தைக் கொன்று குழி வெட்டிப் புதையுங்கள். அன்னிய நாட்டுக் கொள்கையை இறக்குமதி செய்து அந்நாட்டின் ஏஜண்டுகளாக இந் நாட்டில் இருப்பவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளாதீர்கள். அதிகார அரசியலில் ஈடுபட்டு மாணவர் இயக்கத்தைக் கெடுக்காதீர்கள். நிர்மாண வேலையைச் செய்ய முன்வாருங்கள். உங்களிடையே கட்டுப்பாடும், பொறுப்பும் இல்லாததைக் குறித்து வருந்துகிறேன்," என்று கூறுகிறார் வீரர் ஜெயபிரகாஷ். இக் கட்டுரையில் மாணவர் பிரச்னையைப் பற்றி அவர் செய்துள்ள பிரசங்கத்தின் சுருக்கத்தைப் பிரசுரித்திருக்கிறோம். தமிழ் நாட்டு மாணவர்கள் படித்துப் பயனடைய வேண்டும்.]

"இந்திய மாணவர் காங்கிரஸ்தான் இத் தேச மாணவ சமூகத்தின் உண்மைப் பிரதிநிதி ஸ்தாபனம் என்று நான் கூற வேண்டிய அவசியம் இல்லை. "மாணவர் சம்மேளனம்" என்று ஒன்று இருக்கிறதே அது மாணவர்களுடைய ஸ்தாபனமே அல்ல. அது வெறும் கம்யூனிஸ்டுக் கட்சியின் கிளைதான்.

ரஷ்யாவின் அன்னிய நாட்டுக் கொள்கையைப் பின் பற்றுவதே உலகத்தில் எல்லா தேசத்திலுமுள்ள கம்யூனிஸ்டுக் கட்சியின் அடிப்படையான கொள்கை. 1942-ம் ஆண்டு புரட்சி நடந்த காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி நடந்துகொண்ட விதத்தை நாம் யாவரும் நன்கு அறிவோம். இந்தியா இதுவரை கண்டிராத அளவில் பொது ஜனங்கள் புரட்சியில் ஈடுபட்ட காலத்தில், ஒருகாலத்தில் புரட்சிக் காரர்களாக இருந்தவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் வேவுகாரர்களாகவும், கையாட்களாகவும்

மாறிவிட்டனர். இந்த படுமோசமான தேசத் துரோக நிகழ்ச்சிக்குச் சமமான மற்ருெரு நிகழ்ச்சியை சரித்திரத்தில் கூட பார்ப்பது மிகவும் கடினமாக இருக்கும்.

தேசபக்தியுள்ள இந்தியன் என்ற முறையில் இந்தியா சுதந்திர மடைந்தவுடன் சோவியத் ரஷ்யாவுடன் ஸ்நேகமாக வாழ்வதையே நான் விரும்புகிறேன். சரி சமமான அந்தஸ்துடன்கூடிய சம உறவாகவே அது இருக்கவேண்டும். ஒரு தேசத்தின் தேசிய விவகாரத்தில் மற்ருெரு நாடு தலையிடக்கூடாது. இந்தியா சோஷலிஸக் குடியரசு தேசமாக ஆனபிறகு கூட இத்தேச விவகாரத்தில் ரஷ்யா தலையிடுவதை கொஞ்சம் கூட நான் பொறுக்க முடியாது. இக் கொள்கையின் பலனுக ரஷ்யாவின் ஐந்தாம் படை இத் தேசத்தில் வாழ எந்த தேசியவாதியும் சோஷலிஸ்டும், இந்தியனும் அனுமதிக்க மாட்டான்.

அன்னிய கையாட்கள் பிரிட்டிஷ் கையாட்களாகவோ ரஷ்ய கையாட்களாகவோ, யாராயிருந்தாலும் சரி, அவர்களை நான் வெறுக்கிறேன். கம்யூனிஸ்டுக் கட்சியை நான் எதிர்ப்பதற்கு இதுதான் அடிப்படையான காரணம்.

## வகுப்பு வாதம்

நமது தேசிய நலனுக்கு வகுப்புவாதம் பெரிய அபாயம். ஒவ்வொரு வகுப்பும் வகுப்பு வாதத்தினுல் வீணுகப் பாதிக்கப் படுகிறது. அன்னிய நாட்டு தலையிடுதல் எவ்வளவு பாதகம் விளைவிக்குமோ அதைவிட மோசமான நிலைமை ஹிந்து வகுப்பு வாதமாயிருந்தாலும், சீக்கிய வகுப்பு வாதமாயிருந்தாலும், முஸ்லிம் வகுப்பு வாதமாயிருந்தாலும், எல்லாவற்றையும் பெரிய கெடுதலாகவே நான் கருதுகிறேன்.

மாணவ சமூகத்திலே, வகுப்புவாத உணர்ச்சிகளும் ஜாதிபேதங்களும் தோன்றியிருப்பதைக் கண்டு நான்

அடைந்திருக்கும் மனோவேதனையை வெளிச் சொல்லாமல் இருக்கமுடியாது. மாணவர்களின் தேசிய சம்பிரதாயத்திற்கும் இது மிகவும் விரோதமானது.

## முஸ்லிம் மாணவருக்கு ஒரு வார்த்தை

தேசிய சுதந்திரம், தேசிய வளர்ச்சி, க்ஷேமம் இவை யாவும் எல்லா சமூகத்தினருக்கும் பொதுவானதுதான். இவைகளைப் பெற எல்லா சமூகத்தினரின் ஒத்துழைப்பும் அத்தியாவசியமாகும். முஸ்லிம் இளைஞர்கள் வகுப்பு வாதத்தினால் மிகவும் பீடிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் மிகவும் கவலைப்படுகிறேன். அவர்களுடைய நடவடிக்கைகளினால் இந்தியா மாத்திரம் பாதிக்கப்படவில்லை. அவர்களுடைய சமூகமும் பாதிக்கப்படுகிறது. இவ்வுண்மையை அவர்கள் உணரவேண்டும். தேசம் முழுமைக்கும் மறுக்கப்படும் விஷயம் ஓர் சமூகத்திற்கு மாத்திரம் கொடுக்கப்பட்டுவிடுமா? இந்தியாவிற்கு விடுதலை இல்லை என்றால் முஸ்லிம்களுக்கும் கட்டாயம் சுதந்திரம் இல்லை. இந்தியா வறுமையில் வாடினால், முஸ்லிம்களும் வறுமையில்தான் வாடவேண்டும். பஞ்சம், சுதந்திரம் இப்பிரச்னைகளுக்கு வகுப்பு பேதமே இருக்க முடியாது. ஆகவே முஸ்லிம் வாலிபர்கள் சற்று அவர்கள் அனுஷ்டிக்கும் வகுப்புவாதக் கொள்கையைப்பற்றி புனர் ஆலோசனை செய்யும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

## மாணவரும் அரசியலும்

இந்திய மாணவர் காங்கிரஸ் கிளர்ச்சி ஆர்ப்பாட்டங்கள் செய்வதுடன்கூட ஆக்க வேலைகள் செய்வதில் சுறுசுறுப்பாக ஈடுபடவேண்டும். கலை, கல்வி, தொழிற்சங்க இயக்கம், தொண்டர்படை, சுகாதாரம், இம்மாதிரியான இயக்கங்களிலே அன்றாட வேலைத்திட்டம் ஒன்றை வகுத்துக் கொண்டு 'ஊழியம் செய்வதற்கு' மாணவர் காங்கிரஸ்

திட்டம் வகுத்திருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு நல்ல வேலை எதையும் செய்து சாதிக்க முடியவில்லை. விடுமுறை நாட்களுக்கு நல்ல திட்டம் வகுத்து ஊழியம் செய்ய மாணவர் காங்கிரஸ் முயற்சிக்க வேண்டும்.

அரசியல் பிரச்னைகள், சர்ச்சைகள் இவைகளிலிருந்து மாணவர்கள் விலகி தனித்து நிற்பது முடியாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மாணவர் இயக்கத்தை அரசியல் சர்ச்சைகளின் அரங்கமாகச் செய்வதை நான் விரும்பவில்லை. அதிகார அரசியலை இவ்வியக்கத்தில் புகுத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

## மாணவர் பொறுப்பு

மற்றொரு விஷயத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். அதுதான் தேச புனர் நிர்மாணத்தில் மாணவர் எடுத்துக் கொள்ள வேண்டிய விஷயம். தேசியப் புரட்சியின் லக்ஷியம் கைகூடிவிட்டதாக இப்பொழுது ஓரளவு சொல்ல முடியும். புரட்சிக்காக ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கும்போதே சீர்திருத்த வேலைகளைப்பற்றி சிந்திக்க வேண்டியதும் நமது கடமையாகும். அதற்கு ஓர் புதிய விதமான மாணவன் நமக்குத் தேவை. புதிய மாணவன் வேண்டுமானால் புதிய விதமான பயிற்சியும், கல்வியும் கொடுக்கப்பட வேண்டும்.

சுதந்திரமடைந்தவுடன் பொருளாதாரம், கலாசாரம், சமூகம், போன்ற எல்லாத் துறைகளிலும் திட்டம் போட்டு வளர்ச்சிக்காக நாம் பாடுபட வேண்டும். ஸ்தானீக காரியாலயங்களை நடத்தவும், அயல் நாடுகளுடன் அரசியல் தொடர்பு கொள்ளவும் திறமை உள்ளவர்கள் நமக்கு வேண்டும். ராணுவம் வேறு இருக்கிறது. தேசத்திலுள்ள நிர்வாக அமைப்பிலேயே அடிப்படையான மாறுதல் செய்யப்பட வேண்டும். அரசியல், பொருளாதார ஜனநாயக ஆட்சியை நடத்த நாம் ஏற்பாடு செய்தாக வேண்

டும். தற்போதுள்ள சர்வகலாசாலைகளும், மாணவர் களும் இப்பெரும் பொறுப்புகளை ஏற்றுச் சமாளிப்பது சாத்யமில்லை. இப்பொழுது இருப்பதைவிட மற்றொரு விதமான பயிற்சி கொடுக்கப்படவேண்டும். கட்டுப்பாடு உணர்ச்சியும் கடமையைச் செய்வதிலுள்ள பக்தியும் வேறு விதமாக இருக்க வேண்டும். இப்பொழுதுள்ள கல்வி முறை உளுத்துப்போனது என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால், நமது மாணவர்களிடத்தில் பொறுப்பும், கட்டுப்பாடும் இல்லை யென்பதை என்னால் குறிப்பிட முடியாமலிருக்க முடியவில்லை.

## 11—10—46 பிறந்த தினம்



ஜெயபிரகாஷ் நாராயண்

# காங்கிரஸும் சோஷலிஸ்டுகளும்

[சென்ற மாதம் 19, 20 தேதிகளில் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியின் தேசிய நிர்வாக சபையின் கூட்டம் டில்லியில் டாக்டர் ராம் மனோஹர் லோஹியா தலைமையில் நடைபெற்றது. அச்சுத் பட்வர்த்தன் பொதுக் காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினராக ஜெயபிரகாஷ் ஆகிவிட்டதால், பொதுக் காரியதரிசி பதவியை ராஜிநாமா செய்து விட்டார். ஆனால் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராக அவர் இருப்பார்.

அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில முக்கிய தீர்மானங்களைக் கீழே காணலாம்.]

“மதத்தின் பேராலோ, பணத்தின் பேராலோ, அதிகாரத்தின் பேராலோ, நாட்டின் பேராலோ நடக்கும் அநீதிகளை எதிர்த்து மக்கள் நடத்தும் போராட்டத்திற்குச் சென்ற காலத்தைப் போலவே இனியும் காங்கிரஸ் மகாசபை தலைமை தாங்கி நடத்தவேண்டும்.

பிரிட்டிஷாரின் ஆதிக்கம் அணுவளவு இருக்கும்வரை, மக்களின் நலனுக்கும் சர்க்காரின் கொள்கைக்கும் உள்ள வித்யாசம் மறைந்துவிட்டதாக நாம் கருத முடியாது.

நமது சுதந்திரத்தின்மீது நேரடியான தாக்குதல் இனி இருக்காது. ஆனாலும் பிரிட்டிஷாரின் உதவியினால் சலுகைகள் பெற்று வாழுகின்றவர்கள், பொது ஜனங்களின் உற்சாகத்தினால் உதயமாகிற புதிய சர்க்காரைப் பலஹீனப் படுத்த முயற்சிக்கின்றனர். இந்த பக்கத்தாக்குதல் புதியப் பிரச்னைகளை கிளப்பியிருக்கிறது. அவைகளைத் தீர்க்க நாம் புதிய முறைகளைக் கையாள வேண்டும்.

சர்க்காரின் செல்வாக்குக்கு உட்படாதபடி காங்கிரஸ் ஸ்தாபனம் இருக்கவேண்டியது அவசியம். பொது மக்க

ளுக்குப் பரிபூர்ண அதிகாரம் கிடைப்பதை எதிர்ப்பவர்களுக்கு சலுகைகள் காட்ட முயற்சிப்பது அந்நிய ஆதிக்கத்தின் செல்வாக்கை மறைமுகமாக நீண்ட நாளுக்கு நீடிக்கச் செய்யும் என்பதை நாம் வலியுறுத்துகிறோம். சமஸ்தான மக்களின் நலனுக்கு விரோதமாக சமஸ்தானாதிபதிகளுக்கும், முஸ்லிம் பாமர நலனுக்கு விரோதமாக லீகர்களுக்கும், சலுகைகள் கொடுப்பது நமக்குத் தோல்வியை விளைவிப்பதுடன் புதிய அபாயங்களையும் விளைவிக்கும்.

நமது சமூக வாழ்வை, வகுப்பு வேற்றுமை சமீப காலத்தில் மிகவும் பாதித்திருக்கிறது. சுதந்திரக் குறிக்கோளிலிருந்து மக்களின் பலத்தை மற்ற வழிகளிலே மாற்ற செய்யப்படும் பக்கவாட்டு தாக்கு முறைகளிலே இது ஒன்றாகும். இம்மாதிரி பயமுறுத்தலுக்கு ஒரு காலத்திலும் நாம் பணியக்கூடாது. அமைதியை நிலைநாட்டுவதற்கு போலிஸார் கையாளும் முறையோடு நமது முயற்சி நின்று விடக்கூடாது.

பொருளாதார அபிவிருத்தியும், வேலையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்படியான தங்கு தடையற்ற சந்தர்ப்பத்தை உண்டாக்குவது ‘சுதந்திரத்தின்’ அர்த்தம் என்பதை யாவரும் அறிந்து கொள்ளும் வழியில் நாம் முயற்சிகள் செய்தாக வேண்டும்.

> பட்டினி பயம், தேவை, ஏழ்மை, ஏற்றத்தாழ்வு முதலியவைகளை அறவே ஒழிக்க சோஷலிஸ சமுதாய அமைப்பு மிகவும் அவசியம் என்பதைக் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி மனப்பூர்வமாக நம்புகிறது

சமூகப் பொருளாதாரத் துறையில் ஹரிஜனங்களுக்குள்ள இடையூறுகளைத் தகர்த்தெரிய ஜாதி ஹிந்துக்களின் பிற்போக்கான மனோபாவத்தை ஒழிக்க வேண்டும்.

அரசியல் பொருளாதார உரிமைகளை மற்றவர்களைப் போலவே முஸ்லிம்களும் அனுபவிக்க வேண்டுமென்பதை

யும், ஒரு சில முதலாளிகளின் கைகளில் நமது பொருளாதார வாழ்வு சிக்கியிருப்பதை அகற்றி விட்டால் நமது வாழ்க்கைத் தரம் உயரும் என்பதையும் தீவிர முயற்சியினால் முஸ்லிம் பாமரர்கள் உணரும்படி செய்து விட்டால், அவர்களும் தேசிய சுதந்திரப் போராட்டத்தில் நம்முடன் கலந்து கொள்வார்கள். காங்கிரஸின் தேசிய முறை எந்தப் பிரஜைக்கும் எவ்விதமான தடையையும் விதிக்கப் போவதில்லை என்பதையும், கஷ்டத்திலிருந்து விடுதலை அடைய அவனுக்குள்ள உரிமையை விஸ்தரிக்கப்போகிறதென்பதையும், தனிப்பட்டவர்களின் முயற்சியோடு ஒத்துழைத்து 'நிவாரணத் திட்டங்களை' நடைமுறையில் நிறைவேற்றுவதன் மூலம் புதிய காங்கிரஸ் சர்க்கார்கள் நிரூபிக்க வேண்டும்.

புதிய சர்க்காரை பலவீனப்படுத்த முயலும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் கையாட்கள்—முஸ்லீம் லீக், சமஸ்தானாதிபதிகள், பிரிட்டிஷ் வர்த்தக முதலாளிகளுடன் உறவு கொண்டிருக்கும் இந்திய முதலாளிகள்—யாராயிருந்தாலும் இவர்களது முயற்சிக்குத் தகுந்த பதில் நடவடிக்கை பொது ஜனங்களின் பலத்தைப் பிரதிபலிக்கும் ஸ்தாபனமாக காங்கிரஸை வலுப்படுத்த வேண்டியதேயாகும். சர்க்காரின் நடவடிக்கையில் நம்பிக்கை வைத்திருப்பதன்மூலம் காங்கிரஸை பலப்படுத்த முடியாது.

தேசிய விடுதலை இயக்கத்தின் தனிப்பெரும் சுதந்திர ஸ்தாபனமாகவும், மக்களின் அன்றாடத் தேவைகளைத் திருப்தி செய்ய முயற்சித்து 'சுதந்திரத்தின் பொருளை' வெளிப்படுத்த வேண்டுமென்ற திடசங்கல்பம் செய்து கொண்ட மக்களின் மனஉறுதியைப் பிரதிபலிக்கும் ஸ்தாபனமாகவும், காங்கிரஸை ஆக்குவதே, காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியின் கொள்கையாகும். அவ்விதம் செய்வதன் மூலமே தற்சமயம் சட்டபூர்வமான வழியில் செல்

வதினால் ஏற்படும் விபரீதங்களைத் தடுப்பதற்குச் சாத்திய மாகும். 'பழைய நிலைமை' என்ற கோட்டை, நம் முன்னே தகர்க்கப்படுவதற்கு காரணமாயுள்ள மக்களின் 'அதிருப்தியையும்' அவர்கள் மறக்கமுடியாமல் செய் வதற்கும் இதுதான் வழி.

**அன்னிய நாடுகளில் இந்தியத் துருப்புகள்**

ஆசிய, ஆப்ரிக்கா மக்கள் அவர்களுடைய ஸ்தலங் களிலே பரிபூர்ண சுதந்திரத்தை நிறுவுவதற்கு சந்தர்ப் பம் வாய்க்கும்போதெல்லாம் உதவியளிப்பது இடைக் கால சர்க்காரின் அன்னியநாட்டுக் கொள்கையாக இருக்க வேண்டும். இக் கொள்கையின் முதல் படியாக இந்தோ னேஷியாவிலும் இராக்கிலும் பிரிட்டிஷாரால் உபயோ கிக்கப்படும் இந்தியத் துருப்புகளை உடன்டியாக வாபஸ் வாங்கவேண்டியது சர்க்காரின் கடமையாகும்.

நவம்பர் மாதத்தில் இந்தோனேஷியாவிலிருந்து துருப்புகளை வாபஸ் வாங்குவதாக பிரிட்டிஷார் சொல்லி யிருக்கின்றனர். லக்ஷக்கணக்கான இந்தோனேஷிய தேசீய வாதிகள் இந்தியத் துருப்புகள் வாபஸ் ஆகாமலிருப் பதைக்கண்டு வருத்தமடைகின்றனர். கொஞ்சம் கொஞ்ச மாக வாபஸ் வாங்குவது சுமத்ராவிலும் ஜாவாவிலும் ஏராளமாக ஆயுதங்களைக் குவித்துக் கொண்டிருக்கும் டச்சு ஏகாதிபத்தியத்திற்கு உதவி அளிப்பதாக இருக் கிறது. தாமதமில்லாமல் இந்தியத் துருப்புகள் வாபஸ் வாங்கப்பட்டவுடன், டாக்டர் சுகர்ணுவின் குடியரசை இந்தோனேஷியாவின் உண்மைச் சுதந்திர சர்க்காராக இடைக்கால சர்க்கார் அங்கீகாரம் செய்து அவர்க ளுடன் 'ராஜீய தொடர்பு' வைத்துக் கொள்ளவேண்டும்.

தெற்கு ஈரானில் ஆங்கிலோ-ஈரானியன் எண்ணெக் கம்பெனியின் நலன்களுக்காக இந்தியத் துருப்புகள் ஏகமாக குவிக்கப்படுகிறது. நம் தேசத்திற்கு அருகே யுள்ள மத்திய கிழக்கு தேசங்களுடன் நேசமாக நாம்

வாழவேண்டியது, இந்திய நலனுக்கு அவசியமான நம்மை பிரிட்டிஷார் சிக்கவைக்க முயற்சிக்கும் ... களையும், மத்திய கிழக்கு மக்கள் தங்களுடைய எண்ணெயையும், மற்ற இயற்கை சாதனங்களையும் அவர்களுடைய நலனுக்காக உபயோகிப்பதைத் தடுக்க பிரிட்டிஷார் கையாளும் முறைகளையும் கடுமையாக நாம் எதிர்த்தாக வேண்டும். இக் கொள்கையின் முதல்படியாக இராக்கிலிருந்து இந்தியத் துருப்புகள் உடனடியாக வாபஸ் செய்யப்படவேண்டும்.

## இந்தியக் கடற்படை

இந்தியக் கடற்படையினர் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்று இந்திய சேனுதிபதி உத்திரவாதம் அளித்ததின் பேரில்தான் சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் வேலை நிறுத்தம் செய்த இந்திய கடற்படையினர் 'ஸ்டிரைக்கை' நிறுத்தினர். ஆனால் இப்பொழுது ராணுவத்தில் சேர்ந்தவர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கும் இடங்களிலும், சர்க்கார் டிபார்ட்மெண்டுகளிலும் வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்ட கடற் படையினருக்கு வேலை கொடுக்கக் கூடாதென்று உத்திர விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இப்பொழுது தேசிய சர்க்கார் அதிகாரத்திலிருப்பதால், இந்தியக் கடற்படையினரின் வழக்குகள் புனர் ஆலோசனைக்கு வருமென்றும், தங்களுக்கு மறுபடியும் வேலை கிடைக்குமென்றும், அல்லது தகுந்த அளவிற்கு ஈடாவது கிடைக்கும் என்றும் கடற்படையைச் சேர்ந்தவர்களும், ஆபீஸர்களும் எதிர்பார்க்கின்றனர்.

எந்தக் காரணங்களுக்காக கடற்படையினர் வேலை நிறுத்தம் செய்தார்களோ அக் கோரிக்கைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

இவர்களின் கோரிக்கைகளைப் பரிபூர்ண அனுதாபத்துடன் காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சி ஆதரிப்பதுடன்

[illegible]ர்லால் நேரு, சர்தார் படேல், தற்காப்பு மந்திரி [illegible]கள் எல்லோரும், கடற் படையினரின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அநேக வருஷங்களாக சுமத்தப்பட்டிருக்கிற அநீதிகளை எதிர்த்து, கடற்படை அதிகாரிகளுடன் தீரமாகப் போராடிய இந்திய கடற்படையினருக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

## கோவா போராட்டம்

இன்றைய நிலைமையில் இந்தியர் தங்கள் அதி[illegible]ரத்தை ஓரளவாவது உபயோகப்படுத்த முடி[illegible] இடைக்கால சர்க்கார் கோவாவிலுள்ள தற்போதை[illegible] நிலைமையைத் தவிர்க்க தலையிடவேண்டியது அவ[illegible]மாகும். நமது சர்க்காரும் மக்களும் சேர்ந்து செய்யு[illegible] முயற்சியின் பலனாக கோவா வாசிகள் தங்கள் உரிமை[illegible]களையும் சுதந்திரத்தையும் பெறுவார்கள் என்று காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சி நம்புகிறது.



113417

சோஷலிஸ்ட்
பொதுக் காரியதரிசி
அச்சுத் பட்வர்த்தன்

Printed at Renaissance Printers Ltd., T. Nagar, Madras
Q. H. Ms. 124—3000—9-10-46.